# வணிகவரி மற்றும் பதிவுத் துறை

## மானியக் கோரிக்கை எண் – 10
## வணிகவரிகள்

## மானியக் கோரிக்கை எண் – 11
## முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு

அறிவிப்புகள்
**2018 – 2019**

கே.சி. வீரமணி
வணிகவரித் துறை அமைச்சர்

(C)
தமிழ்நாடு அரசு
**2018**

## 1. விருதுநகர் மாவட்டம் இராஜபாளையத்தில் ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகம் கட்டுதல்

விருதுநகர் மாவட்டத்தில், உதவி ஆணையர் (வணிகவரி), இராஜபாளையம்–1, உதவி ஆணையர் (வணிகவரி), இராஜபாளையம்–2 மற்றும் வணிகவரி அலுவலர், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகியோரது அலுவலகங்கள் தனியார் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. இம்மூன்று அலுவலகங்களுக்கு அனைத்து கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஒருங்கிணைந்த கட்டடம் கட்டப்பட வேண்டுமென வணிகப் பெருமக்களிடமிருந்து கோரிக்கை வரப்பெற்றுள்ளது.

எனவே, **மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, விருதுநகர் மாவட்டம் இராஜபாளையத்தில் ரூ.196.90 இலட்சம் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடம் கட்டப்படும்.

## 2. வேலூர் மாவட்டம் அரக்கோணத்தில் வணிகவரி அலுவலகக் கட்டடம் கட்டுதல்

வேலூர் மாவட்டம் அரக்கோணத்தில் தனியார் கட்டடத்தில் இயங்கி வரும் வணிகவரி அலுவலகத்தில் **2045** பதிவுபெற்ற வணிகர்கள் உள்ளனர். தனியார் கட்டடத்தில் செயல்படும் இவ்வலுவலகத்திற்கு அரக்கோணம் நகரின் மையப்பகுதியில் அனைத்து வசதிகளுடன் கூடிய கட்டடம் கட்டப்பட வேண்டும் என்ற கோரிக்கை வணிகப் பெருமக்களிடமிருந்து வரப்பெற்றுள்ளது.

**மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, வேலூர் மாவட்டம், அரக்கோணத்தில் வணிகவரி அலுவலர் அலுவலகம் ரூ.**106.15** இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

## 3. மதுரை ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டட வளாகத்தில் உள்ள மூன்று மின்தூக்கிகளைப் புதுப்பித்தல்

மதுரை ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடத்தில் 27 வணிகவரி அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. இந்த அலுவலகங்களுக்கு தினந்தோறும் பெருமளவு வணிகப் பெருமக்களும், அவர்களின் பிரதிநிதிகளும் வருகை புரிகின்றனர். இக்கட்டடத்தில் உள்ள பழமையான மின்தூக்கிகளில் அடிக்கடி பழுது ஏற்படுவதால் அதனை பயன்படுத்துவோர் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர். எனவே, பழமையான மின்தூக்கிகளை அகற்றி, நவீன வசதிகளுடன் கூடிய மின்தூக்கிகள் அமைக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

எனவே, **மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** மதுரை ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடத்தில், ரூ.80.15 இலட்சம் மதிப்பீட்டில் மூன்று மின்தூக்கிகள் நிறுவப்படும்.

**4. சென்னை கிரீம்ஸ் சாலையிலுள்ள பேரறிஞர் அண்ணா பவளவிழா நினைவுக் கட்டடத்தில் உள்ள இரண்டு மின்தூக்கிகளைப் புதுப்பித்தல்**

சென்னை கிரீம்ஸ் சாலையிலுள்ள பேரறிஞர் அண்ணா பவளவிழா நினைவுக் கட்டடத்தில் வணிகவரித்துறை நிர்வாக அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இவ்வலுவலகங்களுக்கு வணிகப் பெருமக்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகள் பெருமளவில் வருகை புரிகின்றனர். பழமையான மின்தூக்கிகள் அடிக்கடி பழுதடைகின்ற காரணத்தினால் வருகை தரும் வணிகப் பெருமக்களுக்கு அதிக சிரமம் ஏற்படுகிறது. எனவே பழமையான மின்தூக்கிகளை மாற்றி அமைக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

எனவே, **மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** சென்னை கிரீம்ஸ் சாலையிலுள்ள பேரறிஞர் அண்ணா பவளவிழா நினைவுக் கட்டடத்தில் உள்ள பழமையான இரண்டு மின்தூக்கிகள், ரூ.**57.75** இலட்சம் மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் மாற்றியமைக்கப்படும்.

**5. கோயம்புத்தூர் ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டட வளாகத்தில் உள்ள இரண்டு மின்தூக்கிகளைப் புதுப்பித்தல்.**

கோவை வணிகவரி அலுவலக ஒருங்கிணைந்த கட்டடம் தரைதளம் மற்றும் நான்கு தளங்களை கொண்டுள்ளது. வணிகப் பெருமக்கள் இந்த அலுவலகங்களுக்கு அதிக அளவில் தினந்தோறும் வருகை புரிகின்றனர். இக்கட்டடத்தில் உள்ள பழமையான மின்தூக்கிகள் பழுதடைந்துள்ள காரணத்தினால் நவீன வசதியுடன் புதுப்பிக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

எனவே, **மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, கோவை ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடத்தில் இயங்கி வரும் இரண்டு மின்தூக்கிகள் ரூ.**28.35** இலட்சம் மதிப்பீட்டில் நவீன வடிவமைப்புடன் புதுப்பிக்கப்படும்.

**6. பட்டுக்கோட்டை பதிவு மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக வளாகம் கட்டுதல்**

பட்டுக்கோட்டை பதிவுத்துறை அலுவலகங்களுக்கு, ஆண்டுதோறும் தோராயமாக **25,000** பொதுமக்கள் ஆவணப் பதிவிற்காக வந்து செல்கின்றனர்.

அப்பகுதியில் மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), மாவட்டப் பதிவாளர் (தணிக்கை), இணை–**1** மற்றும் இணை–**2** சார்பதிவாளர் அலுவலகங்கள் செயல்படுகின்றன. இவ்வலுவலகங்களில் பதிவு செய்யப்படும் ஆவணங்களை நவீன முறையில் பாதுகாப்பதும், வலைதள பதிவிற்கு உரிய கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பதும் அவசியமாகிறது. எனவே, **மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** ரூ.**2.15** கோடி மதிப்பீட்டில், பட்டுக்கோட்டையில் புதிய ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக வளாகம் கட்டப்படும்.

## 7. தென்காசி பதிவு மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக வளாகம் கட்டுதல்

தென்காசி பதிவுத்துறை அலுவலகங்களுக்கு, ஆண்டுதோறும் தோராயமாக **37,000** பொதுமக்கள் ஆவணப் பதிவிற்காக வந்து செல்கின்றனர்.

அப்பகுதியில் மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்), மாவட்டப் பதிவாளர் (தணிக்கை), இணை–1 மற்றும் இணை–2 சார்பதிவாளர் அலுவலகங்கள் செயல்படுகின்றன. இவ்வலுவலகங்களில் பதிவு செய்யப்படும் ஆவணங்களை நவீன முறையில் பாதுகாப்பதும், வலைதள பதிவிற்கு உரிய கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பதும் அவசியமாகிறது. எனவே, **மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** ரூ.**2.15** கோடி மதிப்பீட்டில், தென்காசியில், புதிய ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலக வளாகம் கட்டப்படும்.

**8. மாவட்டப் பதிவாளர் மற்றும் உயர் அலுவலர்களின் விரைவான தகவல் பரிமாற்றத்திற்கு மடிக்கணினிகள் வழங்குதல்**

பொது மக்களிடமிருந்து வரப்பெறும் கோரிக்கைகள் மீது துரித நடவடிக்கை எடுக்க தகவல் பரிமாற்றம் மிகவும் இன்றியமையாததாகும்.

அதனைக் கருத்தில் கொண்டு, உடனுக்குடன் தகவல்களை துறை சார்ந்த அலுவலர்களுக்கு பரிமாற்றம் செய்வதற்கு ஏதுவாக, 95 மாவட்டப் பதிவாளர்கள், 20 உதவி பதிவுத்துறைத் தலைவர்கள், 11 துணை பதிவுத்துறைத் தலைவர்கள் மற்றும் 4 கூடுதல் பதிவுத்துறைத் தலைவர்கள் ஆகிய 130 அலுவலர்களுக்கு, **மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** ரூ.81.76 இலட்சம் மதிப்பீட்டில் புதிய மடிக்கணினிகள் வழங்கப்படும்.

**9. வங்கியில் பெற்ற கடனிற்காக சொத்துக்களை பிணையமாக வைத்து பதிவு செய்யப்படும் ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டண உச்ச வரம்பினை நிர்ணயித்தல்**

சொத்துக்களின் மீது கடன்பெறும்போது, கடன் தொகைக்குப் பிணையமாக அச்சொத்துக்களின் மூல ஆவணங்களை வங்கிகளில் ஒப்படைத்து உடன்படிக்கைகள் பதிவு செய்யப்படுகின்றன. அவ்வாறான உடன்படிக்கைகளுக்கு மூன்று மாத காலத்திற்குட்பட்டு அல்லது அதற்கு மேற்பட்டு என இரு விதமாக முத்திரைத் தீர்வை விதிக்கப்படுகிறது.

**மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** வங்கி கடனிற்கு பிணையமாக வைத்து பதிவு செய்யப்படும் மூன்று மாத காலத்திற்குட்பட்ட மற்றும் அதற்கு மேற்பட்ட காலங்களுக்காக விதிக்கப்படும் முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்திற்கு, செலுத்தப்பட வேண்டிய அதிகபட்ச முத்திரைத் தீர்வை ரூ.**30,000/–** ஆகவும் அதிகபட்ச பதிவு கட்டணம் ரூ.**6,000/–** ஆகவும் நிர்ணயிக்கப்படும்.

**கே.சி. வீரமணி**
**வணிகவரித் துறை அமைச்சர்**